நகர் ஊரமைப்பு இணை இயக்குனர் / உதவி இயக்குனர் (பொ)
தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.,

---

நடவடிக்கை கடிதம் எண்: **765/2020** தமா2 நாள்: **04.09.2020**

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம் - தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், கபிஸ்தலம் ஊராட்சி மற்றும் கிராமம், நி.அ.எண்கள்: 271/1,2,3,4, 274/3pt-ல் 146185.88ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து – உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை எண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
2. அரசாணை எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிக்காட்டி நெறிமுறை ந.க.எண்: 13193/2017/LA2 நாள்: 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017
4. அரசாணை எண்: 21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள்: 05.02.2019
5. அரசாணை எண்: 100, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள்: 01.07.2019
6. மனுதாரர் திரு.M.தாவுது மைதீன் அவர்களின் கடிதம் நாள்.12.04.2020
7. இவ்வலுவலக கடிதம் கடிதம் இதே எண். நாள்.29.06.2020
8. வட்டார வளர்ச்சி அலுவலர், பாபநாசம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் ந.க.எண்.1500/2020ஆ1 நாள்.06.08.200

---------

உத்தரவு:-

பார்வை (1) மற்றும் (2)ல் கண்ட அரசாணையின் படியும் பார்வை (3)ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (6)ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்டஉத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு அதன் தொடர்நடவடிக்கையாக பார்வை (5)ல் கண்ட அரசாணையின்படி சாலை மற்றும் பூங்கா ஒதுக்கீடு வரைபடம் தயார் செய்யப்பட்டு பார்வை (7)ல் கண்ட இவ்வலுவலக கடிதம் வாயிலாக சாலை மற்றும் பூங்கா அமைப்பு வரைபடம் அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை (8)ல கண்டுள்ள வட்டார வளர்ச்சி அலுவலர், பாபநாசம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் வாயிலாக சாலை மற்றும் பூங்கா பகுதி ஏற்பு செய்து அதன் விபரம் பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், கபிஸ்தலம் ஊராட்சி மற்றும் கிராமம், நி.அ.எண்கள்: 271/1,2,3,4, 274/3pt-ல் 146185.88.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ.இ.(த.மா)எண்: 66/2020** என எண்ணிடப்பட்டு, கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

..2..

மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு: 146185.88 ச.அடி

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை: 44

விற்கப்பட்ட மனை எண்கள்: 1-33, 336-38, 40, 43-49.

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை: 17

விற்கப்படாத மனைகளின் எண்கள்: 34,39,41,42,50-62.

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு: 46913.00ச.அடி

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு: 4714. 00ச.அடி (10.05%)

செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:

1) பரிசீலணைக் கட்டணம்:

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலணைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | Registration Slip No. DTCP/L/0559700/2017-ல் மனை எண்: 34,35,39,41,42, 50-65 -ற்கு மட்டும் இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலணைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் அரசு வங்கி கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்: (உதாரணமாக)

கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் மனைகளை வரன்முறை கோரி 04.11.2018 முதல் பெறப்படும் விண்ணப்பத்திற்கு பார்வை (4)ல் கண்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளவாறு வரன்முறைக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 30/- வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 25/-வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| **29** | **167.22** | **167.22 X 30 = ரூ.5017/-** | **167.22 X 25 = ரூ.4181/-** |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கானஅரசுகணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| **0217 Urban Development**<br>**60 Other Urban Development Schemes**<br>**800 Other Receipts**<br>**AT Receipts under Regularisation Charges of Unapproved Layouts and Plots –DTCP 27 Non Taxation Fees - 30 Regularisation (DPC: 0217 60 800 AT 2730)** | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழக்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் ஆகியவற்றினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் விபரம் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

..3..

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை (1) மற்றும் (2)ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை (நிலை)எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017-ல் விதி எண்:7(g)(ii)-ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கையளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல்நடவடிக்கைகாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இணை இயக்குனர் / உதவி இயக்குனர்(பொ)
தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.

4/9/2020

**இணைப்பு:**
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

**பெறுநர்:**

வட்டார வளர்ச்சி அலுவலர்,
பாபநாசம் ஊராட்சி ஒன்றியம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**நகல்:**

1. திரு.M.தாவுது மைதீன்,
   நெ.27, மெயின் செயித் தெரு,
   பாபநாசம், தஞ்சாவூர் மாவட்டம்.
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
   மாவட்ட ஆட்சியரகம்,
   தஞ்சாவூர் மாவட்டம்.
3. உதவி இயக்குநர்,
   நில அளவை பதிவேடு துறை,
   மாவட்ட ஆட்சியரகம்,
   தஞ்சாவூர் மாவட்டம்.
4. வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   பாபநாசம் வட்டம்,
   தஞ்சாவூர் மாவட்டம்.

   (3, 4) சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு)
5. சார்பதிவாளர்,
   சார்பதிவாளர் அலுவலகம்,
   சுவாமிமலை
   தஞ்சாவூர் மாவட்டம்.
   — சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு)
6. தொழில்நுட்ப வைப்பறை — ஒரு வரைபட தொகுப்பு

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) பாபநாசம், அவர்களின் செயல்முறைகள்
அளிப்பவர்: திரு.ம.ஆனந்தராஜ்,

ந.க.எண்.1500/2020/ஆ1 நாள்.22-10-2020

பொருள் - மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - உள்ளூர் திட்டக் குழுமம் தஞ்சாவூர்- பாபநாசம் ஊராட்சி ஒன்றியம்- கபிஸ்தலம் ஊராட்சி- நில அளவை எண்கள். 271/1,2,3,4,274/3pt-ல் 146185.88 சதுர அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப் பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களால் தானாக முன்வந்து கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ள வரைப்படத்திலுள்ள படி மனைகளுக்கு வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

பார்வை - 1. அரசாணை நிலை எண்.78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (UD4[3]) நாள்.04.05.2017.

2. அரசாணை எண்.172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (UD4[3]) நாள்.13.10.2017.

3. மனுதாரர் திரு. தாவூத் மைதீன் அவர்களின் விண்ணப்பம் நாள். 12.04.2020

4.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கை ந.க.எண்.765/2020/தமா2, நாள்.29.06.2020 மற்றும் 04.09.2020

**ஆணை**

தஞ்சாவூர் உள்ளூர் திட்ட குழுமம் பகுதி பாபநாசம் வட்டாரம், கபிஸ்தலம் ஊராட்சி புல எண்கள். 271/1,2,3,4,274/3pt-ல் 146185.88 சதுர அடியில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவை முறைப்படுத்தி பார்வை 4-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் செயலாணையில் கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள 17 விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு உரிய கட்டணங்கள் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

21

1. சார்பதிவாளர் சுவாமிமலை ஆவண எண்.1607/2020-ன் படி கபிஸ்தலம் ஊராட்சி புல எண்கள். 271/1,2,3,4,274/3pt -ல் சதுர அடிக்கு மற்றும் சாலைகளுக்கான இடம் தானபத்திர பதிவு ஊராட்சிகளுக்கு எழுதிகொடுக்கப்பட்டுள்ளது.

2. வரன்முறை கட்டணம் 3920.41 சதுர மீட்டருக்கு ரூ.30.00 வீதம் ரூ.117612/- (ரூபாய் ஒரு இலட்சத்து பதினோழயிரத்து ஆறநூற்று பன்னிரெண்டு மட்டும்) பாபநாசம் பாரத மாநில வங்கியில் 21.09.2020-ல் செலுத்தப்பட்டுள்ளது.

3. வளர்ச்சிக் கட்டணம் 3920.41 சதுர மீட்டருக்கு ரூ.25 வீதம் ரூ.98010 (ரூபாய் தொன்னூற்றி எட்டாயிரத்து பத்து மட்டும்) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பாராமரிப்பில் உள்ள இணை (வங்கி கணக்கு எண். 37840100000322)க்கிற்கு வரவு வைத்திடும் பொருட்டு 22.09.2020 அன்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இராஜகிரி கிளையில் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி கட்டணங்கள்யாவும் பெறப்பட்டதால் கபிஸ்தலம் ஊராட்சி புல எண்கள். 271/1,2,3,4,274/3pt -ல் உறுப்பினர் செயலர், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட விற்பனை செய்யப்படாத 34,39,41,42,50-62 மனைகளுக்கு மட்டும். வரன்முறைப்படுத்தி இதன் வழி ஆணையிடப்படுகிறது.

பார்வை 4-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் செயலாணையில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்.

22/10

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
பாபநாசம்

22.10.2020

இணைப்பு- வரைபடம்

பெறுதல்-

திரு. M.தாவுது மைதீன்
27,மெயின் செட்டித் தெரு,
பாபநாசம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

நகல்- நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களுக்கு.
நகல்- சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம் சுவாமிமலை.
நகல்- ஊராட்சி மன்ற தலைவர் கபிஸ்தலம்.